# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*****

முறையீட்டு மனு எண். 341/2016
ஆணை. நாள். 03–09–2018

திரு. நா. காசிராஜன்,
முன்னாள் துணைத் தலைவர்,
வாணிபுத்தூர் பேரூராட்சி,
பிள்ளையார்கோவில் தெரு,
கள்ளியங்காடு,
தூக்கநாயக்கன் பாளையம்,
கோபி வட்டம்,
ஈரோடு மாவட்டம். ––– முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
வாணிபுத்தூர் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம். ––– எதிர் மனுதாரர்.

**ஆணை**

ஈரோடு மாவட்டம், வாணிபுத்தூர் பேரூராட்சி, பிள்ளையார்கோவில் தோட்டம், கள்ளியங்காடு பகுதியினை சேர்ந்த திரு. நா.காசிராஜன், வாணிபுத்தூர் முன்னாள் பேரூராட்சித் துணைத் தலைவர் என்பவரின் 21.04.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.04.2016 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 341/2016 என எண்ணிடப்பட்டு, உரிய அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

திரு.நா.காசிராஜன், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், ஈரோடு மாவட்டம், வாணிபுத்தூர் பேரூராட்சி திட்டப் பணிகள் தொடர்பாகவும் மற்றும் சில புகார்களையும் தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 28.04.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி வாணிபுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

வாணிபுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 107/2016/நாள் 20.05.2016ன் மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

(1) ஈரோடு மாவட்டம், வாணிபுத்தூர் பேரூராட்சி தினமலர் செய்தித் தாளில் வெளியிடப்பட்டவிளம்பரம் பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம் கொடுக்கப்படவில்லை எனவும், பேரூராட்சித் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டதாகவும், இவ்விளம்பரத்திற்கான கட்டணம் பேரூராட்சி பொது நிதியில் இருந்து வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2) வாணிபுத்தூர் பேரூராட்சியில் 2011-12 முதல் 2015-16 ஆண்டு வரை கீழ்க்கண்ட விவரப்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணிகள் விவரம் | மதிப்பீடு (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | குடிநீர் திட்டப் பணிகள் | 44.13 |
| 2. | தார்ச்சாலை பணிகள் | 196.27 |
| 3. | கான்கிரீட் சாலைகள் | 51.27 |
| 4. | வடிகால் பணிகள் | 141.36 |
| 5 | நிழற்குடை பணிகள் | 4.50 |
| 6. | திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் | 34.00 |
| 7. | தடுப்புச்சுவர் மற்றும் சுற்றுச் சுவர் பணிகள் | 19.50 |
| 8. | சோலார் விளக்கு அமைத்தல் | 6.97 |
| 9. | பழுதுபார்ப்பு பணிகள் மற்றும் அங்கன்வாடி | 26.95 |
| 10. | கழிப்பிட பணிகள் | 2.35 |
| 11 | பூங்கா பணிகள் | 36.50 |
| | மொத்தம் | 567.00 |

(3) தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், 1920 மற்றும் தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்த விதிகள், 2000-ன்படி ரூ.15.00 லட்சத்திற்கு மேல் உள்ள ஒப்பந்த புள்ளிகளை மாவட்ட ஒப்பந்தபுள்ளி மலரிலும், பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலக இணையதளமான www.tenders.tn.gov.in மற்றும் ,www.tntownpanchayats.org என்ற இணைதயதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரூ.25.00 லட்சத்திற்கு மேல் தமிழ்நாடு மாநில ஒப்பந்தபுள்ளி மலரிலும், தமிழ்நாடு அரசு இணையதளத்திலும், பேரூராட்சிகளின் இயக்குநரக இணையதளமான www.tenders.tn.gov.in மற்றும் www.tntownpanchayats.org யிலும் வெளியிடப்பட்டுள்ளதாகவும், மேலும் மேற்படி விளம்பரங்கள் பேரூராட்சிகளின் இயக்குநரால் செய்தி தாள்களில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் பேரூராட்சியின் செயல் அலுவலரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4) அரசு ஆணை(நிலை) எண். 166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள் 12.04.2008 ன்படி நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்ட

பின்னரே பணிகள் எடுக்கப்பட்டுள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(5) 2011-12 முதல் 2015-16 முடிய வாணிபுத்தூர் பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து பணிகளுக்கும் வாணிபுத்தூர் பேரூராட்சி மன்றத்தில் பணி தேர்வுக்கு மன்றப் பொருள் வைக்கப்பட்டு, பணி மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும், நிர்வாக அனுமதி பெற்றபின்னர் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதாகவும், மதிப்பீட்டிற்கு தக்கவாறு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு மாவட்ட செய்தி மலர் / மாநில அரசு செய்தி மலர் மூலம் விளம்பரம் செய்யப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தப்புள்ளிகள் முடிவுற்றதும் அதனை பேரூராட்சி மன்றத்தில் பொருள் வைக்கப்பட்டு வெற்றிபெற்ற ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளி மன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும். வாணிபுத்தூர் பேரூராட்சியில் மன்ற ஒப்பதல் பெறப்பட்டு விதிமுறைகளுக்குட்பட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும். இதில் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் எவரும் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

(6) மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் உதவிப் பொறியாளர் மூலம் பார்வையிடப்பட்டும், உதவி செயற்பொறியாளர் மூலம் மேலொப்பம் பெறப்பட்டும் வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(7) அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் விருப்ப நிதியின் கீழ் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொள்ள நிர்வாக அனுமதி, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் ந.க.எண்.1937/2015/அ.3/நாள் 31.12.2015ன்படி பெறப்பட்டதின் அடிப்படையில் பேரூராட்சி ந.க.ண். 326/2015/அ.1/நாள் 19.01.2016ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8) வாணிபுத்தூர் பேரூராட்சியில் தலைவரின் பெயர் திருமதி. ஆர். பரமேஸ்வரி என நடைமுறையில் உள்ளதாகவும், செய்திதாள்களில் தனது பெயரை திருமதி.பரமேஸ்வரி ராஜசேகரன் என பதிவு செய்தது அவரின் தனிப்பட்ட கருத்து எனவும், 16.12.2015 அன்று செய்தி தாளில் வெளியிடப்பட்ட விளம்பரம் பேரூராட்சி மூலம் கொடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(9) பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் மேற்படி விளம்பரம் கொடுக்கப்படவில்லை எனவும் வாணிபுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(10) ஈரோடு மாவட்டம், வாணிபுத்தூர் தேர்வு நிலை பேரூராட்சி, தூக்கநாய்க்கன்பாளையத்தில் மேற்கொள்ளப்பட்ட 11 வகையான திட்டப் பணிகள் மற்றும் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இவை அனைத்தும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், 1920 மற்றும் தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்த விதிகள், 2000-ன் படி ரூ 15.00 லட்சத்திற்கு மேல் உள்ள ஒப்பந்தபுள்ளிகளை மாவட்ட மலரிலும், பேரூராட்சிகளின் இயக்குநரக இணைய தளத்திலும், ரூ. 25.00 லட்சத்திற்கு மேல் உள்ள பணிகளை தமிழ்நாடு மாநில ஒப்பந்தபுள்ளி மலரிலும், பேரூராட்சிகளின் இயக்குநரக இணையதளத்திலும் விளம்பரம் வெளியிடப்படுவதாகவும், அரசாணை(நிலை) எண் 166/நகராட்சிகள்

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.04.2008 மற்றும் அரசாணை(நிலை) எண். 309/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (நி.நி.(3) துறை நாள் 02.06.2000–ன்படி நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு செயல்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 11.11.16 ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோரை மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 14.12.2016 அன்று ஆஜராகக் கோரி ஆணையிடப்பட்டது.

14.12.2016 அன்று முறையீட்டு மனுதாரர் திரு என். காசிராஜன் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........23.03.2016ம் நாளிட்ட புகார் மனு தன்னால் இந்திய ஜனாதிபதி ஆரம்பித்து துணைக் கண்காணிப்பாளர், ஊழல் கண்காணிப்பு துறை ஆகியோர் வரை 31 நபர்களுக்கு அனுப்பப்பட்டதாகவும், லஞ்ச ஒழிப்புத்துறையிலிருந்து வந்த கடிதத்தின் அடிப்படையில் அதே கடித நகலை 21.04.2016ல் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியதாகவும் தெரிவித்துள்ளார். பின்னர் படிவம் 1–ல் பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களை சமர்ப்பித்துள்ளதாகவும், தான் வாணியம்புத்தூர் பேரூராட்சியில் 2011 முதல் துணைத் தலைவராக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட வாக்குமூலத்தில் கீழ்க்குறிப்பிட்டுள்ள புகார்களை தெரிவித்துள்ளார்:-

1. பேரூராட்சித் தலைவர் சார்பாக விளம்பரம் அளித்ததாகவும், அந்த விளம்பரம் ரூ.5கோடியே. 27 லட்சத்தில், 11 பணிகள் நடந்ததாக விளம்பரத்தில் அலுவலர் பெயர் இல்லாமல் பேரூராட்சித் தலைவர் பெயர் மட்டும் இருந்ததாகவும் அதிலும் பேரூராட்சித் தலைவரின் கணவரின் பெயரும் சேர்ந்து இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். இந்த பணிகளுக்கு அரசாணையின் மூலம் உரிய விளம்பரங்கள் செய்யப்படவில்லை எனவும், மேலும் நிர்வாக ஆணையில் செயல் அலுவலரின் கையொப்பம் இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.
2. 11.04.2016ல் வாணிபுத்துார் பேரூராட்சி செயல் அலுவலரால் தனக்கு அளிக்கப்பட்ட கடிதத்தில் உள்ள விவரங்களும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ள விளம்பரங்களும் மாறுபட்டவையாக உள்ளதாக தெரிவித்துள்ளார்.
3. 25.5.2016ல் 6 அலுவலர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும், அதில் செயல் அலுவலர் என குறிப்பிட்டு ஒரே கடிதத்தினை நகல் எடுத்து அனுப்பியதாகவும் அதன் நகல் தற்போது இணைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.
4. பொருள் எண். 7ல், 14.12.2015ல் பூங்கா பணிகள் மேற்கொண்டது என விளம்பரம் இருந்ததாகவும், ஆனால் பூங்கா பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளி திறக்கப்பட்டுள்ளதெனவும், இந்நிகழ்வினை பேரூராட்சித் தலைவரும் திரு.நஞ்சுண்டன் என்பவரும் சேர்ந்து செய்துள்ளார்கள் எனத் தெரிவித்துள்ளார்.
5. 9.9.16ல் பேரூராட்சியில் ஒப்பந்தபுள்ளி பூங்கா பணிக்காக ஒரு தீர்மானம் இயற்றப்பட்டதாக தெரிவித்து மேற்படி பணி திரு.நஞ்சுண்டன் என்பவருக்கு ஒப்பந்தபுள்ளி வழங்கியதாக சொல்லப்பட்டதாக தெரிவித்துள்ளார்.
6. தன்னால் 15.9.2016ல் எதிர்க்கப்பட்ட தீர்மானங்கள் 3 எனவும், அவை மீண்டும் 16.9.2016ல் கொண்டு வரப்பட்டதாகவும், அதில் யார் குறைவாக எலம் கேட்டார்கள் யார் அதிகம் கேட்டார்கள் என்ற விவரம் இல்லை எனவும் இது சம்பந்தமாக

பேரூராட்சி மன்றத்தில் வைக்கப்பட்ட பொருள் குறித்து தான் கோரிய விவரங்களை செயல் அலுவலர் தரவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

திருமதி .பரமேஸ்வரி ராஜசேகர் அவரது கணவர் திரு. ராஜசேகரன் மீது ஒப்பந்தபுள்ளி விதிகள் மீறல் படி சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும், வாணிபுத்தூர் பேரூராட்சியில் 2015–16ம் ஆண்டு அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டதாகவும், இதில் 2 பயனாளிகள் கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களாக உள்ளவர்கள் எனவும், மக்களுக்காக ஒதுக்கக்கூடிய வீடுகளை சட்டமன்ற உறுப்பினர் அவர்களே தங்கள் இயக்கங்களை சேர்ந்த தலைவர்களுக்கு ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தலைவர்கள் மக்களுக்காக செயல்படக்கூடியவர்கள் எனவும் ஆனால் மாறாக மக்களுக்கு சேரவேண்டியதை தலைவர்கள் தாங்களாகவே எடுத்துக் கொள்வதாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

14.12.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் வாணிபுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு அ.வில்லியம் ஜேசுதாஸ் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள பூங்காவிற்காக 4 நிலைகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டதாகவும், 3 நிலைகளில் பணி முடிக்கப்பட்ட விவர தொகைதான் பணி முடிக்கப்பட்ட விளம்பரத்திற்கு கொடுக்கப்பட்டதாகவும், 4வது நிலை பணிக்கு மட்டுமே மனுதாரர் குறிப்பிடும் பின்னாளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதாகவும் மேற்படி 4வது கட்ட பணி இறுதி செய்ய பேரூராட்சிமன்றதில் வைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். தினமலரில் மனுதாரர் குறிப்பிட்ட விளம்பரம் பேரூராட்சி மன்றத் தலைவர் தனது சொந்த பொறுப்பில் கொடுக்கப்பட்டது எனவும், எனவே அதில் செயல் அலுவலர் பெயர் இடம் பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளதோடு மேற்படி விளம்பத்திற்காக பேரூராட்சியில் இருந்து எந்தவிதமான செலவினமும் மேற்கொள்ளவில்லை எனவும் மனுதாரர் கூறியதுபோல் இல்லாமல் எல்லா நிலைகளிலும் ஒப்பந்தபுள்ளி வெளிப்படையாக சட்ட விதிமுறைகளின்படி முழுக்க முழுக்க இறுதி செய்யப்படுவதாகவும் பேரூராட்சித் தலைவருடைய கணவருக்கும், துணைத் தலைவருக்கும் சொந்த பிரச்சினை காரணமாக இந்த மனுக்கள் போடப்பட்டுள்ளதாகவும் இருவரும் வேறுவேறு கட்சியினை சார்ந்தவர்கள் எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள பூங்கா, முன்னாள் பெருந்தலைவர் பெயரில் வைக்கப்பட இருந்ததாகவும், ஆனால், உரிய ஆணைகள் இல்லாததால் அது ரத்து செய்யப்பட்டதாகவும், வட்டார செய்தி மலரில் அந்தந்த மதிப்பீடுகளுக்கு ஏற்ப அரசாணையினை ஏற்று விளம்பரம் செய்யப்பட்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள எந்த குற்றச்சாட்டும் உண்மையல்ல எனவும் தெரிவித்து இது சம்பந்தமான ஆவண நகல்களையும் சமர்த்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 20.06.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்கண்ட முறையீடு தொடர்பாக கீழ்க்கண்ட விளக்கங்களை சமர்ப்பிக்க வாணிபுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

(i) வாணிபுத்தூர் பேரூராட்சியில் 2015–16 நிதியாண்டில் ரூ 567.00 லட்சம் மதிப்பீட்டில் 11 வகையான பணிகள் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இத்தொகையில்

எந்தெந்த திட்டத்தின் கீழ் என்னென்ன பணிகள் எவ்வளவு மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது? அப்பணிகளுக்கான பேரூராட்சி மன்றத் தீர்மான எண் மற்றும் நாள் விவரம்.

(2) இப்பணிகள் யாவற்றிற்கும் ஒப்பந்த புள்ளிகள் மொத்தமாக கோரப்பட்டதா? அல்லது தனித்தனியாக கோரப்பட்டதா?

(3) அவ்வாறு ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டமைக்கு எந்தெந்த வகையில் விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டது. விளம்பரங்கள் பிரசுரம் செய்யப்பட்ட மாவட்ட/மாநில ஒப்பந்தபுள்ளி மலர்கள் மற்றும் தேதி அதற்கான ஆவணங்கள்.

(4) மேற்கண்ட பணிகளின் குறைந்த ஒப்பந்தபுள்ளி அனுமதித்த பேரூராட்சியின் தீர்மான நகல்கள் பணிகள் வாரியாக.

(5) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியரால் ஒதுக்கப்பட்ட தொகை மற்றும் மாவட்ட ஆட்சியரின் ஆணை எண்.

(6) தொகுப்பு வீடுகள் பயனாளிகள் பெயர் தொழில் விவரம்.

(7) வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் பட்டியல் பேரூராட்சியால் பேணப்படுகிறதா?

மேற்கண்ட விவரங்களுக்கு வாணிபுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். எண்.107/2016/அ.1/நாள்.08.09.2017ன் மூலம் தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

(1) வாணிபுத்தூர் பேரூராட்சியில் 2011-12 ம் ஆண்டு முதல் 2015-16ம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து பணிகளுக்கான மதிப்பீடு மற்றும் பேரூராட்சி தீர்மான எண் நாள் ஆகியவைகளுக்கான பட்டியல் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

(2) ஒவ்வொரு பணிக்கும் ஒப்பந்தபுள்ளிகள் தனித்தனியாக கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(3) ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்ட விவரங்கள் தனியாக இணைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4) தீர்மான நகல்கள் விவரங்கள் இணைத்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(5) அந்தியூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின்படி சட்டமன்ற உறுப்பினர் விருப்ப நிதியின் கீழ் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொள்ள ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவு ந.க.எண்.1937/2015/அ.3. நாள்.30.01.2015 ன்படி ஆணையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6) தொகுப்பு வீடுகள் அனுமதிக்கப்பட்ட பயனாளிகள் பட்டியல் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

| வ.எண். | பயனாளிகளின் பெயர் | தொழில் |
|---|---|---|
| 1. | திரு. சின்னான், த/பெ சின்னா போயன் | கட்டிட தொழிலாளி |
| 2. | திரு டி.பி.ரங்கநாதன், த/பெ பழனிகவுண்டர் | விவசாயக் கூலி |
| 3. | திரு கதிர்வேல், த/பெ ரங்கநாதன் | விவசாயக் கூலி |
| 4. | திரு ஆறுமுகம், த/பெ அம்மாசை நாடார் | கூலி |

(7) அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 04.12.2015–ஆம் தேதிய பரிந்துரை கடிதத்தில் திரு. சின்னான், திரு. டி.பி.ரங்கநாதன், திரு.கதிர்வேல் ஆகிய மூவருக்கும், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களது 06.12.15ம் தேதிய பரிந்துரை கடிதத்திலும் , மற்றும் திரு. ஆறுமுகம், த/பெ. அம்மாசை நாடார் என்பவர் உட்பட மொத்தம் நால்வருக்கும் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.1937/2015/அ3/நாள். 31.12.2015 தேதிய ஆணையின்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிட்டதின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது எனவும் மேற்கண்ட நபர்களின் பெயர்கள் வாணிபுத்தூர் பேரூராட்சி வறுமைகோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் இடம் பெறவில்லை எனவும் மேற்கண்ட விவரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்கப்படவில்லை எனவும் தனது கடிதத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

(8) வாணிபுத்தூர் பேரூராட்சியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் பட்டியல் பேணப்பட்டு வருவதாக தெரிவித்து அதன் நகலும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 27.09.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி புகார் மனுவில் தெரிவித்துள்ள பணிகளில் ஏதேனும் விதிமீறல்கள்/முறைகேடுகள் உள்ளனவா ? முறைப்படி விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளனவா ? நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு பணிகள் முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளதா என்ற விவரங்களை பேரூராட்சியின் ஆவணங்களின் அடிப்படையிலும், பணிகள் நடைபெற்ற இடங்களில் தல ஆய்வு மேற்கொண்டும். ஈரோடு பேரூராட்சிகளின் உதவி இயக்குரின் பிரத்யேக குறிப்புகளுடன் அறிக்கை சமர்ப்பிக்க 2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (c)ன் கீழ் ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 12.03.2018ம் நாளிட்ட அழைப்பாணையின்படி, மேற்படி புகார் மனு தொடர்பாக தனது விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 14.05.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு மண்டலம் அவர்கள், திரு. நா.காசிராஜன், முன்னாள் வாணிபுத்தூர் பேரூராட்சி துணைத் தலைவரின் முறையீட்டு மனு சம்பந்தமாக பேரூராட்சி அலுவலகத்தினை ஆய்வு செய்து 2011 முதல் 2016 வரை இந்த பேரூராட்சியில் நடைபெற்ற 132 பணிகள் குறித்து பதிவேடுகளையும் ஆவணங்களையும் ஆய்வு செய்து அதற்கான அறிக்கையினை தற்போது சமர்ப்பிப்பதாகவும், அதனை தன்னுடைய வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளுமாறும், வாணிபுத்தூர் பேரூராட்சியில் மாதா மாதம் நடக்கும் மன்றக் கூட்டங்களில் மனுதாரர் கலந்து கொண்டு கையொப்பமிட்டுள்ளதாகவும், அங்கு தனது எதிர்ப்பினை எந்த இடத்திலும் பதிவு செய்யவில்லை எனவும், பேரூராட்சித்தலைவர் மற்றும் பெரும்பாலான மன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட கட்சியினை சேர்ந்தவர்கள் எனவும், மனுதாரரான துணைத் தலைவர் வேறொரு கட்சியினை சேர்ந்தவராக இருந்ததால் இது போன்ற புகார் மனு அனுப்பப்பட்டுள்ளதாகவும். மற்ற 14 வார்டு உறுப்பினர்களும் யாரும் புகார் ஏதும் செய்யவில்லை எனவும், மனுதாரரும் மன்றக் கூட்டங்களில் மன்ற பொருள் குறித்து எந்தவித மறுப்போ எதிர்ப்போ பதிவு செய்யவில்லை எனவும், பேரூராட்சி செயல் அலுவலர் ஏற்கனவே அவர் அனுப்பிய அறிக்கையில் 31 பணிகளில் தவறும் நடந்துள்ளது எனதவறாக குறிப்பிட்டுள்ளதாகவும் அனைத்து பணிகளும் விதிகளின்படி நடைபெற்றுள்ளதாகவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். கொள்முதல் தொடர்பான இனங்களில் மட்டுமே ரூ. 5.00 லட்சத்திற்கு மேல் மதிப்பு

இருந்தால் Tender transparancy Act படி விளம்பரம் செய்யப்படவேண்டும் எனவும், மற்ற பணிகளில் ரூ 10.00 லட்சத்திற்கு மேற்பட்டால் மட்டுமே பத்திரிகை விளம்பரம் செய்யவேண்டும் எனவும், அந்த விதிகளை சரியாக புரிந்து கொள்ளாமல் தவறாக செயல் அலுவலர் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும், வாணிபுத்தூர் பேரூராட்சியில் 5 ஆண்டுகளுக்கும் உள்ளாட்சி நிதி தணிக்கை நடைபெற்றுள்ளதாகவும், தணிக்கையின்போது சில தணிக்கைத் தடைகள் எழுப்பப்பட்டுள்ளதாகவும், அவைகள் பணிகளை பற்றியது அல்ல எனவும், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையினரால் எழுப்பப்பட்ட அனைத்து தணிக்கைத் தடைகளும் பேரூராட்சியால் அளிக்கப்பட்ட விளக்கங்களின் அடிப்படையில் விலக்கப்பட்டுவிட்டதாகவும், தற்போது மேற்படி புகார் மனு தொடர்பாக எந்த தணிக்கைத் தடைகளும் நிலுவையில் இல்லை எனவும் ஈரோடு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்

14.05.2018 அன்று ஈரோடு மாவட்டம், வாணிபுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி, தன்னால் ஏற்கனவே அனுப்பப்பட்ட அறிக்கையில் சில மாறுபாடுகளை தற்போது குறிப்பிட விரும்புவதாக தெரிவித்து Tender Transparency Act படி பொருட்கள் கொள்முதல் செய்வதற்கும் பணிகள் செய்வதற்கும் நிர்ணயிக்கப்பட்ட பண அளவுகள் குறித்து தெளிவு பெறாத நிலையில் தன்னுடைய அறிக்கையில் 31 பணிகளில் தவறுகள் நடந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் தற்போது மேற்கண்ட விதிகளின்படி பணிகளில் தவறுகள் ஏதும் ஏற்படவில்லை என்பதை பதிவு செய்வதாகவும், கடந்த 2011 ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை நடந்த பணிகளில் எழுப்பப்பட்ட தணிக்கைத் தடைகள் பேரூராட்சியால் அளிக்கப்பட்ட விளக்கங்களின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்புட்டு தணிக்கைத் தடைகள் அனைத்தும் விலக்கப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில வாணிபுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 07.06.2018ம் நாளிட்ட அழைப்பாணையில், முறையீட்டு மனுதாரரின் 21.04.2016ம் நாளிட்ட முறையீட்டு மனு தொடர்பாக தங்களது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து வாணிபுத்தூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் மற்றும் அப்போதைய செயல் அலுவலர் திரு.மு. ராஜமனோகரன் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

24.07.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான ஈரோடு மாவட்டம், வாணிபுத்தூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் திருமதிபரமேஸ்வரி, மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தனது வாக்குமூலத்தில், தான் 2011 அக்டோபர் முதல் 2016வரை ஐந்து ஆண்டு காலம் வாணிபுத்தூர் பேரூராட்சியில் தலைவராக இருந்ததாகவும், மனுதாரர் திரு.நா. காசிராஜன் என்பவர் வாணிபுத்தூர் பேரூராட்சியில் துணைத் தலைவராக இருந்ததாகவும், திரு.நா.காசிராஜன், முன்னாள் துணைத் தலைவர், வாணிபுத்தூர் பேரூராட்சி அவர்களால் அனுப்பப்பட்ட மனு விவரம் பற்றிய விவரங்கள் தனக்கு தெரியும் எனவும், மனுவில் குறிப்பிட்டுள்ள விளம்பரம் பேரூராட்சி பொது நிதியில் இருந்து வழங்கப்படவில்லை எனவும், ஒப்பந்தபுள்ளிகள் குறித்து எவ்வாறு விளம்பரம் செய்வார்கள் என்று தனக்குத் தெரியாது எனவும், அதனை செயல் அலுவலர்தான் செய்வார் எனவும் எல்லா பணிகளும் விதிகளின்படி மன்றத்தின் ஒப்புதல் பெற்று உரிய விளம்பரங்கள் செய்து ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதாகவும், தவறுகள் ஏதும் நடைபெறவில்லை எனவும், ஐந்து ஆண்டு காலம் மனுதாரரும் துணைத் தலைவருமான

திரு.நா.காசிராஜன், எல்லா மன்றக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு கையெழுத்திட்டுள்ளதாகவும், அப்போதெல்லாம் எந்தக் குற்றச்சாட்டும் கூறவில்லை எனவும், பதவி நான்கு மாதங்கள் இருக்கும்போது இதுபோன்று உண்மைக்கு புறம்பான புகார்களை அனுப்பியுள்ளதாகவும், அனைத்துக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து பணிகள் குறித்தும் ஒத்த கருத்துடன் கையெழுத்திட்டு பதிவு செய்துள்ளதாகவும், மாற்றுக் கருத்து இருந்திருந்தால் அவர் எதிர்த்திருக்கலாம் எனவும், கம்ப்யூட்டர் ஆபரேட்டர் திருமதி. அனுராதா என்பவரை மாற்றுவதற்கு தீர்மானம் கொண்டு வந்ததாகவும், அதற்கு மட்டும் மேற்படி முறையீட்டு மனுதாரர் எதிர்ப்பு தெரிவித்ததாகவும், அந்த கோரிக்கையும் அவரது விருப்பத்திற்கேற்ப நிறைவேற்றப்பட்டதாகவும், அதைத் தவிர எந்த தீர்மானம் குறித்தும் எந்த பணிகள் குறித்தும் அவரால் எதிர்ப்பு தெரிவிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, வாணிபுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம், ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் அறிக்கை மற்றும் வாக்குமூலம், வாணிபுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் வாணிபுத்தூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் அவர்களின் வாக்குமூலம் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஈரோடு மாவட்டம், வாணிபுத்தூர் பேரூராட்சியில் முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட 2011–ஆம் ஆண்டு முதல் 2016–ஆம் ஆண்டு வரை ரூ.576.00 லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மேற்கொள்ளப்பட்ட அனைத்து பணிகளுக்கும் பேரூராட்சி மன்றத்தில் பணி தேர்விற்கு பொருள் வைக்கப்பட்டு பணி மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கையில் தெரிவித்து தனது வாக்குமூலத்திலும் உறுதி செய்துள்ளார். அங்கீகாரம் பெறப்பட்ட பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதாகவும். மதிப்பீடுகளுக்கு ஏற்றாற்போல் மாவட்ட / மாநில செய்தி மலரில் விளம்பரங்கள் பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் பேரூராட்சி மன்றத்தில் பொருளாக வைக்கப்பட்டு தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளி அங்கீகாரம் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் யாவும் தொழில் நுட்ப அலுவலர்களால் மேற்பார்வை செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாக தனது ஆய்வறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளில் எவ்வித விதி மீறல்களோ முறைகேடுகளோ நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி ஆவணங்களின் அடிப்படையில் அனைத்துப் பணிகளும் முறைப்படி நிர்வாக அனுமதி, தொழில் நுட்ப அனுமதி, ஒப்பந்தபுள்ளி கோரல், பொறியாளர்களால் பணிகள் ஆய்வு செய்யப்பட்டவை ஆகியன கள ஆய்வில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உறுதி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து பணிகளும் சொத்தாக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வாணிபுத்தூர் பேரூராட்சி பொதுமக்களின் அத்தியாவசிய பணிகளான குடிநீர், சாலை அமைத்தல், சோலார் விளக்கு அமைத்தல், நிழற்குடை அமைத்தல், அங்கன்வாடி பழுதுபார்த்தல், கழிப்பிட பணிகள் மற்றும் பூங்கா பணிகள் அனைத்தும் பொதுமக்களின்

நலன் கருதியே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இப்பணிகள் அனைத்து நகராட்சிகள் சட்ட விதிகளுக்குட்பட்டும், அரசாணைகள் மற்றும் அரசின் வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றியும் நிர்ணயிக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட அளவுகோலின்படியும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அனைத்து பணிகளும் அரசு மற்றும் துறை அனுமதி பெறப்பட்டே மேற்கொள்ளப்பட்டது, விசாரணையில் உறுதி செய்யப்பட்டதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதுடன் 14.05.2018ம் நாளிட்ட தனது வாக்குமூலத்தில் மேற்படி வாணிபுத்தூர் பேரூராட்சியில் உள்ள 14 வார்டு உறுப்பினர்கள் யாரும் எந்த புகாரினையும் செய்யவில்லை எனவும், மனுதாரரும் மன்றக் கூட்டங்களில் கலந்து கொண்ட நேர்விலும் எந்த புகாரோ, மறுப்போ தெரிவிக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். மேலும் வாணிபுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் அனுப்பிய அறிக்கையில் 31 பணிகளில் தவறு நடந்துள்ளது என தவறாக குறிப்பிட்டுள்ளதாகவும், அரசாணை விதிகளின்படி கொள்முதல் தொடர்பான இனங்களில் மட்டுமே ரூ 5.00 லட்சத்திற்கு மேல் மதிப்பு இருந்தால் மட்டுமே Tender transprancy Act படி விளம்பரம் செய்யப்படவேண்டும் எனவும் மற்ற பணிகளில் ரூ 10.00 லட்சத்திற்கு மேற்பட்டால் மட்டுமே பத்திரிக்கை விளம்பரம் செய்யவேண்டும் எனவும் இந்த விதிகளை சரியாக புரிந்து கொள்ளாமல் பேரூராட்சி செயல் அலுவலர் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் மேற்கண்ட பணிகள் சம்பந்தமாக வாணிபுத்தூர் பேரூராட்சியில் சில தணிக்கைத் தடைகள் எழுப்பப்பட்டுள்ளதாகவும் அந்த தடைகளும் பேரூராட்சியால் அளித்த பதிலின் அடிப்படையில் விலக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சி தலைவர் மற்றும் பெரும்பாலான உறுப்பினர்கள் ஒரு கட்சியினையும், துணைத் தலைவர் வேறொரு கட்சியினை சார்ந்தவராக உள்ளதால் இவ்வாறான புகார் எழுதப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். 14.05.2018ல் விசாரணைக்கு ஆஜரான செயல் அலுவலரும், வெளிப்படையான ஒப்பந்தப் புள்ளிகள் சட்டப்படி பொருள்கள் கொள்முதல் மற்றும் பணிகள் மேற்கொள்ளுதலுக்கும், நிர்ணயிக்கப்பட்ட பண அளவீடுகள் குறித்து தெளிவு பெறாத நிலையில் தவறாக குறிப்பிட்டு அறிக்கை முதலில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அவ்வாறான முரண்பாடுகள் ஏதும் இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பொருள் தொடர்பாக 24.07.2018ல் ஆஜரான வாணிபுத்தூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் தனது வாக்குமூலத்தில் மனுவில் குறிப்பிட்டுள்ள விளம்பரம் பேரூராட்சி நிதியில் இருந்து வழங்கப்படவில்லை எனவும், முறையீட்டு மனுதார் வாணிபுத்தூர் பேரூராட்சியில் துணைத் தலைவராக இருந்த காலத்தில் அனைத்து பேரூராட்சிமன்றக் கூட்டங்களிலும் கலந்து கொண்ட நிலையில் எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை எனவும், அவரால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட கணினி உதவியாளர் மாற்றம் குறித்து தீர்மானம் ஒன்றைத் தவிர வேறு எந்த தீர்மானம் குறித்தும் எந்த பணிகள் குறித்தும் அவரால் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையிலும், முறையீட்டு மனுதாரர், தனது குற்றச்சாட்டுக்களுக்கான ஆதார ஆவணங்கள் எதனையும் சமர்ப்பிக்காத நிலையிலும் மேற்படி புகார்களுக்கான பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும்

ஈரோடு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வறிக்கை மற்றும் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்கண்ட முறையீட்டு மனுவின் மீதான நடவடிக்கையினை கைவிட முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. இருப்பினும், இந்நேர்வில் தவறான ஒரு அறிக்கையினை சமர்ப்பித்த வாணிபுத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரது செயல்பாடு பாராட்டத் தக்கதல்ல என இம்முறைமன்ற நடுவம் பதிவு செய்வதுடன் இத்தகைய செயல்பாடுகள் இனி ஏற்படாவண்ணம் செயல்பட வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

1.திரு. நா. காசிராஜன்,
முன்னாள் துணைத் தலைவர்,
வாணிபுத்தூர் பேரூராட்சி,பிள்ளையார்கோவில் தெரு,
கள்ளியங்காடு,
தூக்கநாயக்கன்பாளையம்,
கோபி வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
வாணிபுத்தூர் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உ தவி இயக்குநர்,
ஈரோடு மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு